DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 7-2019**

**Deposition of Witness for Prosecution : P.W. 18**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குலோத்துங்கன் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 09.09.2025

**முதல் விசாரணை**

**மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு அரசு தரப்பில் மீண்டும் முதல் விசாரணை**

நான் தற்சமயம் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து 30.04.2020ந் தேதி பணி ஓய்வு பெற்று தஞ்சாவூரில் வசித்து வருகிறேன். கடந்த 12.02.2018ந் தேதி நாகூர் வட்ட ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது திட்டச்சேரி காவல் நிலைய உதவி ஆய்வாளர் மணிமேகலை என்பவரால் வழக்கு பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 44/2018 சட்டப்பிரிவு 302 இ.த.ச வழக்கு கோப்பை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான அருண்மொழித்தேவன் கிராமம் நரிதிண்ணவாய்கால் காலை 10.30 மணியளவில் சென்று சாட்சி மதியழகன், சுபாஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பின்னர் சாட்சிகளிடம் அவர்களிடம் கையொப்பம் பெற்றேன். பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்து இரத்தம் தோய்ந்த மண்

கொஞ்சம், இரத்தம் தோயாத மண் கொஞ்சம் மேலும் பிரேதத்தின் அருகில் நீலம், வெள்ளை கட்டம் போட்ட மேல்சட்டை எரிந்துபோனதும், அருகில் உள்ள துண்டுகள் கொஞ்சம் இரத்தக்கறை உள்ளது. மேலும், ரூபாய் 50 நோட்டு பாதி எரிந்த நிலையில் உள்ளது அந்த ரூபாய் நோட்டின் நம்பர் 6AM051475 ஆகியவற்றை மகசரில் கைபற்றியும் பின்னர் சாட்சிகளிடம் அவற்றில் கையொப்பம் பெற்று தனித்தனியே விசாரணை செய்து கையொப்பம் பெற்றேன். பின்னர் பிரேத விசாரணை காலை 11.30 மணி முதல் 13.00 மணிவரை சம்பவ இடமான அருண்மொழித்தேவன் கிராமம் நரிதிண்ணவாய்கால் என்கின்ற சின்னவாய்கால் வரப்பில் பஞ்சாயத்தார்கள் பன்னீர்செல்வம், கதிரவன், ஜெயசந்திரன், பிரகாஷ், பாலசுப்ரமணியன் ஆகியோர் முன்னிலையில் சாட்சிகள் கார்த்திகேயன், கந்தவேல், மனோகரன், ஈஸ்வரி, காமராஜ் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத விசாரணை முடிக்கப்பெற்று திட்டச்சேரி முதல்நிலை காவலர் 1299 ரமேஷ் என்பவர் பொறுப்பில் பிரேதத்தை ஒப்படைத்து பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடித்ததுடன் நாகப்பட்டினம் அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கின் புகார்தாரரான கிராம நிர்வாக அலுவலர் பரமேஸ்வரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நாகை அரசு தலைமை அரசு மருத்துவமனையில் 16.30 மணிமுதல் 17.30 மணிவரை நடைபெற்ற பிரேத பரிசோதனையில் உடல் உள்ளுறுப்புகளை பரிசோதனைக்கு சேகரித்து பரிசோதனை முடிந்து பிரேதம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் இவ்வழக்கின் தேடப்பட்ட எதிரிகள் ஹரிஹரன் மற்றும் கீதா இருவரும் அருண்மொழித்தேவன் கிராம நிர்வாக அலுவலகத்தில் ஆஜராகி இருப்பதாக VAO பரமேஸ்வரன் என்பவர் எனக்கு கொடுத்த தகவலின் பேரில் நான் உடனே 17.45 மணிக்கு அருண்மொழித்தேவன் VAO பரமேஸ்வரனிடம் எதிரிகள்

ஹரிஹரன் மற்றும் கீதா இருவரும் ஆஜராகி கொடுத்த வாக்குமூலம் மற்றும் VAO அறிக்கை எதிரிகள் ஹரிஹரன் மற்றும் கீதா இருவரையும் ஆஜர் செய்தார். நான் மேற்படி எதிரிகளை பெற்றும் விசாரித்தும் 12.02.2018ந் தேதி 18.15 மணிக்கு VAO அலுவலகத்தில் எதிரிகளை குற்ற காரணம் கூறி கைது செய்தேன். பின்னர் எதிரி ஹரிஹரன் என்பவர் எந்தவித துன்புறுத்தலும் இன்றி தானாக முன் வந்து 18.30 மணிக்கு சாட்சிகள் பரமேஸ்வரன் மற்றும் செந்தில் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். எதிரிகள் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று பின்னர் 2வது எதிரி கீதா என்பவர் எந்தவித துன்புறுத்தலும் இன்றி தானாக முன்வந்து அதே இடத்தில் 19.15 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். வாக்குமூலத்தில் எதிரிகள் மற்றும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். எதிரி ஹரிஹரன் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் சம்பவ நடந்த இடத்தையும், கொலை செய்ய பயன்படுத்திய கைக்கோடரியையும், இருச்சக்கர வாகனத்தையும் மறைத்து வைத்திருக்கிற இடத்தை காண்பித்து எடுத்து ஆஜர் செய்வதாக எதிரி ஹரிஹரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் வீட்டின் பின்புறம் அழைத்து சென்று சாட்சி பரமேஸ்வரன் மற்றும் செந்தில் முன்னிலையில் எதிரி எடுத்து ஆஜர் படுத்திய தடயங்களான பல்சர் PY02R7332 இருச்சக்கர வாகனம், வெளிர் மஞ்சள் நிற கோடு போட்ட முழுக்கை சட்டை இரத்தக்கறையுடன், நீலம் அரக்கு பால் கலர் உள்ள கோடு போட்ட கைலி ஒன்று இரத்தக்கறையுடன், கைக்கோடாரி ஒன்று இரத்தக்கறையுடன் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசரில் 20.30 மணிக்கு கைப்பற்றினேன். சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். 2ஆம் எதிரி கீதா என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் தனது

வீட்டிற்குள்ளே மறைத்து வைத்துள்ள 5லிட்டர் பிளாஸ்டிக் மண்ணெண்ணெய் கேன் மற்றும் சிவப்பு சிமெண்ட் கலர் பூ மற்றும் பார்டர் உள்ள சந்தனகலர் புடவையை எடுத்து ஆஜர் செய்வதாக கூறியதன் அடிப்படையில் அவர் ஊரான ஊழியப்பத்து கிராம வீட்டிற்கு அழைத்து சென்று கீதா அவரது வீட்டின் உள்ளே அடுப்பங்கறையில் இருந்து அதே சாட்சிகளின் முன்னிலையில் எதிரி கீதா எடுத்து ஆஜர் செய்த 5 லிட்டர் பிடிக்கக்கூடிய மண்ணெண்ணெய் கேனில் கோல்டு வின்னர் என்ற லேபிள் ஒட்டப்பட்டுள்ளது அதில் சுமார் அரை லிட்டர் டீசல் இருந்தது, 2. சிவப்பு சிமெண்ட் கலர் பூ மற்றும் பார்டர் உள்ள சந்தன கலர் புடவை ஒன்று இரத்தக்கறை உள்ளது ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசர் மூலம் 21.00 மணிக்கு கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பின்னர் எதிரிகள் மற்றும் தடயங்களுடன் 22.00 மணிக்கு நிலையம் வந்தும் எதிரிகளை திரேக சோதனை செய்து பாராவசம் ஒப்படைத்தும் மேலும் இவ்வழக்கின் எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகள் 302 இ.த.ச. விலிருந்து 120(b), 201, 302 இ.த.ச. r/w 34 இ.த.ச வாக 22.30 மணிக்கு சட்டப்பிரிவு மாற்றம் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். அந்த அறிக்கை ஏற்கனவே அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனது புலன் விசாரணையை முடித்து எதிரி 1 ஹரிஹரன் மீது சட்டப்பரிவு 120(b), 302 இ.த.ச.வாகவும், 2வது எதிரி கீதா மீது சட்டப்பிரிவு 120(b) இ.த.ச r/w 302 இ.த.ச., 302 r/w 201 இ.த.ச.படியும் 21.07.2018ந் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என் முன் விசாரணையில் சொல்லிய சங்கதிகளை தான் இந்த நீதிமன்றத்தில் 16.08.2022ந் தேதி என்னை விசாரித்தபோது முன் விசாரணையில் இதே சங்கதிகளை சொல்லியுள்ளேன் அதே தேதியில் என்னை குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 27.08.2018ல் தான் இறுதி

குற்ற அறிக்கை நீதிமன்றத்திற்கு வரப்பெற்றுள்ளது என்றால் சரிதான். பெரும்பகுதியான ஆவணங்கள் இறுதி குற்ற அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 பரமேஸ்வரனிடம் கொடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் கண்ட அ.சா.2 மற்றும் 3 இதே சங்கதிகளை தான் என்னிடம் சொல்லியதாக அதே Replica பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் VAO கொடுத்தாக சொல்லியுள்ள சங்கதிகளின் பிரதிபலிப்பாக தான் என்னிடம் கொடுத்த சங்கதிகளை தான் பதிவு செய்துள்ளேன் என்றும், தற்சமயம் அதனை மறுத்து சரியல்ல என்று சொல்வது தவறானதாகவும் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சான்று பொருட்கள் கைப்பற்றியதாக சொல்லப்படும் இடங்களில் மூடி முத்திரையிடப்பட்டு சீல் வைக்கப்பட்டதாக ஆவணங்களில் இல்லை. மூடி முத்திரையிடப்படவில்லை என்றால் சரிதான். கோடாரி மற்றும் எதிரிகள் பயன்படுத்திய சொல்லப்படும் சான்று பொருட்களில் ரேகைகள் பரிசோதனைக்கு எடுக்கபடவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சரியாக புலன் விசாரணை செய்யாமல் எதிரிகளை இணைத்து தவறாக இறுதி குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், அதனை அனுசரித்து தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. ஆவணங்கள் திட்டச்சேரி காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.